
# கலைஞரும் நானும் 58

“பத்திரிகையாளர் என்பவர் உள்ளூர் முதல் உலக விவகாரங்கள் வரை அறிந்து வைத்திருப்பவராக இருக்க வேண்டும் என்பதை நான் கலைஞரிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன். அவரைப் போன்ற சிறந்த பத்திரிகை யாளர், சிறந்த நிர்வாகியைப் பார்க்க முடியாது” என நினைவுகளைப் பகிர்கிறார் எழுத்தாளர் அப்பணசாமி.

## “உன் பெயரில் இலக்கணப்பிழை!”

■ அப்பணசாமி, எழுத்தாளர்



“அது என்ன அப்பணசாமி.? இலக்கணப் பிழையோட இருக்கேய்யா உன் பெயர்?’ என அவர் கேட்டது எப்போதும் என்னால் மறக்க முடியாத நாளாக நினைவில் நிற்கிறது. அவரது நினைவாற்றல், பேச்சாற்றல், சிறந்த பத்திரிகையாளர், சிறந்த நிர்வாகி என பன்முக ஆற்றல்களை நாம் மகிழ்ந்து பேசினாலும், அவற்றில் அவர் காட்டும் முனைப்பும் வேகமும்தான் அவரை தனித்துக்காட்டும்.

எனது பள்ளிக்கூட காலத்திலேயே கலைஞர் என்கிற ஆளுமையை, பெயரை அறியத் தொடங்கினேன். அப்போது தேர்தல்களின்போது உதயசூரியனுக்கு வாக்களித்துவிட்டு வந்து, கலைஞர் கட்சிக்குப் போட்டேன் எனக்கூறுவார் என் அம்மா. பிறகு வாசிப்பு, அரசியல் ஆர்வம் வந்த நாட்களில் ‘மிசா’ நெருக்கடி காலத்தில் கலைஞர் மீது அதிகமாகத் தெரிந்துகொள்ளும் ஆர்வம் வந்தது. அதன் பின்னர் கலைஞரின் திரைப்பட வசனங்கள், தி.மு.க. கூட்டங்கள் வழியாக நிகழ்த்தப்பட்ட சமூகநீதியிலான மாற்றங்கள், அதில் கலைஞரின் ஆளுமையினை அறிந்துகொண்டேன். என்றாலும், எனது அரசியல் பார்வை வேறாக இருந்தது.

1987-ஆம் ஆண்டில் பத்திரிகைப் பணிக்காக சென்னை வந்த நிலையில், அய்யா சின்னகுத்தூசி அவர்களின் அறிமுகமும் தொடர்பும் ஏற்பட்டது. அவர்தான் பெரியார், அண்ணா, கலைஞர் மற்றும் திராவிட இயக்கங்களின் பணிகள் குறித்து எனக்கு சரியான புரிதலை உருவாக்கினார். அந்த நிலையில், வேறு பத்திரிகைகளில் வேலை செய்த எனக்கு, ‘முரசொலி’ அலுவலகத்தில் இருந்து புதிதாகத் தொடங்கப்பட்ட நாளிதழில் பணியில் சேர்த்துவிட்டார். அந்த நாளிதழ் நீண்ட நாட்கள் வெளிவரவில்லை. இடையில் நின்றுவிட்டதால், ‘முரசொலி’ ஆசிரியர் குழுவில் இணைக்கப்பட்டேன். அப்போதுவரை கலைஞர் அவர்களுடன் நேரடிப் பழக்கமில்லை.

அய்யா சின்னகுத்தூசி அவர்களுக்கு கலைஞர் அடிக்கடி தொலைபேசியில் பேசுவார். அவர் இல்லாத நேரங்களில் தொலைபேசியை நான் எடுத்தால், ‘‘குத்தூசி இல்லையா?” என்கிற அந்த கரகர குரல் காதில் விழும்.

### நிலக்கரி பேரம்

ஒரு ஞாயிற்றுக்கிழமை பணியில் இருந்த நேரத்தில், முரசொலி மாறன் அவர்கள் ஃபேக்ஸ் மூலம் ஒரு செய்தியை அனுப்பி இருந்தார். அதை எடுத்துக் கொண்டு வரும் நேரத்தில் கலைஞரிடமிருந்து போன் வருகிறது. “யாரு?” என விசாரித்தவர், “என்ன வந்திருக்கு? நீ செய்தி பண்ணிடுவியா?” என விசாரித்து விட்டு, தயார் செய்து கோபாலபுரம் கொடுத்து விடவும் எனக் கூறினார். அந்தக் கடிதம் மிக முக்கியமானது, அரசியல் நிலைமை களையே மாற்றக்கூடியது என அப்போது எனக்குத் தெரியாது. அது, அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா அவர்கள் கையெழுத்திட்ட, நிலக்கரி இறக்குமதி ஆணையின் நகல். அந்த ஆணையில் கையெழுத்திட்ட அதிகாரி, ‘தவிர்த் திருக்கப்படக் கூடியது’ என குறிப்பு எழுதி இருக்கிறார். ஆனால், அதையும் மீறி, ஜெயலலிதா அதில் கையெழுத்திட்டு அனுமதி அளித்திருந்தார்.

நான் செய்தியைத் தயார் செய்து, ஒரு ஆட்டோ பிடித்து கோபாலபுரம் இல்லத்தில் கொடுத்துவிட்டு வருவதற்குள், அலுவலகத்துக்குப் பத்துக்கும் மேற்பட்ட முறை கலைஞர் போன் செய்துவிட்டார். நான் மீண்டும் அவரிடம் பேசிவிட்டு வைத்த அரை மணி நேரத்தில் அலுவலகத்துக்கே வந்துவிட்டார். போஸ்டர் செய்தி, கார்ட்டூன் ஆகியவற்றுக்குக் கொடுத்துவிட்டு, செய்தி அளவு, பத்தி என எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துவிட்டுக் கிளம்பினார். செய்தியின் முக்கியத்துவம், அதற்கு அவர் அளித்த வேகம் எல்லாம் உத்வேகம் அளிக்கக்கூடியதாக இருந்தது. அந்தக் கடிதம் பின்னாட்களில் பெரும் புயலைக் கிளப்பி இருந்தது.

### கிரிக்கெட் செய்தி

1994-ஆம் ஆண்டு, இந்தியா-இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். கபில்தேவ் அதிக விக்கெட் எடுத்து உலக சாதனை படைப்பார் என எதிர்பார்ப்பு இருந்தது. எனக்கு கிரிக்கெட் செய்திகள் மீது ஆர்வம் இல்லை என்பதால், இந்த விவரங்கள் எதுவும் தெரியாது. ஆனால், தினசரி செய்தித்தாள் வாசிக்கும் பழக்கம் இருந்ததால் போட்டி நடக்கிறது என்கிற அளவில் மட்டும் தெரியும். அந்த விளையாட்டு ஞாயிற்றுக்கிழமையில் நடந்தது. திடீரென கலைஞரிடமிருந்து போன். அன்று என்ன செய்திகள் போகின்றன என விசாரித்தவர், ‘வேற என்ன சிறப்புச் செய்தி?’ எனக்கேட்டார்? எனக்கு கிரிக்கெட் போட்டி உடனே நினைவுக்கு வந்து ‘கிரிக்கெட் செய்திகளா அய்யா?’ என்றேன். “கபில்தேவ் சாதனை செய்வார்” என்றவர், அதை செய்தியாக்கச் சொன்னார்.



அதையடுத்து , அதற்கு முன்னர் 10 நாட்கள் ஆங்கிலச் செய்தித் தாள்களை எடுத்து கிரிக்கெட் செய்திகளை வாசித்து, கபில்தேவ் சாதனை குறித்த கட்டுரை எழுதினேன். அது நன்றாக இருந்ததாகப் பின்னர் பாராட்டினார். ஆனால், அதுநாள் வரை எனக்கு கிரிக்கெட் செய்தி எழுதி பழக்கமுமில்லை, பார்த்ததுமில்லை. ஆனால், ஒரு செய்தியாளனுக்கு அவனைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆற்றல் இருக்க வேண்டும் என அவர் விரும்பினார். உலக விவரம் முதல் உள்ளூர் நிலவரம் வரை அறிந்திருக்கும் பத்திரிகையாளர்களை அவருக்குப் பிடிக்கும்.

“உன் பேர் இலக்கணப் பிழையோட இருக்கே, ‘அப்பண்ணசாமி’ என்றுதானே வரவேண்டும், ஏன் ஒற்றெழுத்து மிகாமல் ‘அப்பணசாமி’ என இருக்கிறது” எனக் கேட்டார். இப்படி அவரது அணுக்கங்கள் புதுமையான முறையில் வெளிப்படும். அதேநேரம் கொள்கை சார்ந்து தவறான அடையாளம் உருவானால், பயங்கரமான கோபம் வெளிப்படும். கம்பராமாயணத்தின் இந்தி மொழிபெயர்ப்பு வந்தபோது, அதை ஒரு சிறு செய்தியாக ஒருமுறை பதிவு செய்தேன். அதைப் பார்த்துவிட்டு அவர் அடைந்த கோபம், இப்போதும் என்னால் மறக்க முடியாது.

**தொழில்நுட்ப வளர்ச்சிகள் அவர் ஆசைப்பட்டது போல நிகழ்ந்த காலத்தில் அவர் இருந்தார். முதல் நாள் மேடையில் பேசியது, அடுத்த நாள் காலை பத்திரிகையில் வர வேண்டும் என ஆசைப்படுவார்.**

### ஆறாம் திணை

கணினி அறிமுகம் பெரிதாக இல்லாத காலத்தில், ‘ஆறாம் திணை’ என்கிற இணைய இதழ் தொடங்கினோம். அப்போது தமிழ் ஆட்சிமொழி அமைச்சராக இருந்த தமிழ்க்குடிமகன் அவர்களிடம் அதை விளக்கியபோது, இந்த முயற்சியை கலைஞரின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என அழைத்துச் சென்றார். கலைஞர் மிகவும் வியந்து, இணைய இதழ் எப்படிச் செயல்படும் எனக் கேட்டு தெளிவு பெற்றதுடன் அதற்கு வாழ்த்தும் அளித்தார்.

அதன் பின்னர் அந்த நிறுவனத்தில் இருந்து மற்றொரு இணையம் தமிழில் தொடங்கியபோது, என் பெயரைக் குறிப்பிட்டு வாழ்த்தி இருந்தார். இணைய தொழில்நுட்பத்தினை வளர்த்தெடுக்க வேண்டும் என்கிற அக்கறையினைக் கொண்டிருந்தவர் கலைஞர்.

### ஊடக நிகழ்ச்சி நிரல்

‘விஜய்’ தொலைக்காட்சியில் “மக்கள் யார் பக்கம்” என்கிற விவாத நிகழ்ச்சியின் ஆலோசகராக இருந்தபோது, 2004-ஆம் ஆண்டு தேர்தல் கள நிலவரம் குறித்து நிகழ்ச்சி செய்தோம். அதற்கு அரசியல் தலைவர்களிடம் கேட்க வேண்டிய கேள்விகளைத் தயார் செய்தோம். கலைஞரிடம் கேட்க வேண்டிய முதல் கேள்வியாக ‘கள நிலவரம் எப்படி உள்ளது?’ என்கிற கேள்வியை எழுதி இருந்தேன்.

கோபாலபுரம் வீட்டில் படப்பிடிப்பு நடந்தபோது, அவரிடம் முதலில் கேட்க வேண்டிய கேள்வியைக் கேட்காமல், அதற்குப் பதிலாக, அரசியல் வாழ்க்கை, அண்ணா என பல கேள்விகளைக் கேட்டார் நெறியாளர். இறுதியாக, முதலில் கேட்க வேண்டிய கேள்வியைக் கேட்டார். அதற்கு கலைஞர், "இந்தக் கேள்வியை முதலில் கேட்டிருந்தால் நேர்காணலின் தன்மையே மாறி இருக்குமே ? முதலில் ஏன் இதைக் கேட்கவில்லை?" எனக் கடிந்துகொண்டார். “அய்யா, நான் அப்படித்தான் கொடுத்திருந்தேன். நிகழ்ச்சிப் போக்கில் மாற்றிவிட்டனர்” என சமாதானம் செய்தேன். ஊடகங்களின் நிகழ்ச்சி நிரலை அறிந்த ஊடகர் அவர்.

தொழில்நுட்ப வளர்ச்சிகள் அவர் ஆசைப்பட்டது போல நிகழ்ந்த காலத்தில் அவர் இருந்தார். முதல் நாள் மேடையில் பேசியது, அடுத்த நாள் காலை பத்திரிகையில் வர வேண்டும் என ஆசைப்படுவார். தொலைத்தொடர்பு இல்லாத காலத்திலேயே அதற்கான முயற்சிகள் செய்தவர், இணைய ஊடகம் வரை செயல்படுத்திப் பார்த்தார். அந்த வகையில் கலைஞர் நவீன ஊடகராக என்றும் நினைவுகூரப்படுவார்..!"

...பகிர்வார்கள்

## வேலைவாய்ப்பின் மாடல்..!

பிப்ரவரி 16-ஆம் தேதி கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ‘மக்களுடன் முதல்வர்’ திட்டப் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் 1,598 இளைஞர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார் நமது முதலமைச்சர். அப்போது அவர், தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த 2 ஆண்டுகளில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்கப்பட்டிருப்பதாகக் கூறினார். அத்துடன் அடுத்த 2 ஆண்டுகளில் மேலும் 50 ஆயிரம் பேருக்கு அரசு வேலை வழங்கப்படும் என்றும் உறுதியளித்திருக்கிறார்.

அதேபோல 2022-ஆம் ஆண்டு மார்ச்சில் முதலமைச்சரால் அறிமுகம் செய்யப்பட்ட ’நான் முதல்வன்’ திட்டத்தில் இதுவரை 1.19 லட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். பொறியியல், காப்பீடு, சுகாதாரம், லாஜிஸ்டிக்ஸ், தகவல் தொழில் நுட்பம் என பல்வேறு துறைகளில் பரவலாக வேலைவாய்ப்பு பெற்றிருக்கும் இவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.2 லட்சம் முதல் ரூ.25 லட்சம் வரை ஊதியம் வழங்கப்படுகிறது.

ஆனால், பா.ஜ.க. ஆளும் குஜராத்திலோ கடந்த 2 ஆண்டுகளில் 32 இளைஞர்களுக்கு மட்டுமே அரசு வேலைகள் வழங்கப் பட்டுள்ளன. அதுவும் அகமதாபாத்தில் 22 பேருக்கும், பாவ் நகரில் 9 பேருக்கும், காந்தி நகரில் ஒருவருக்கும் அரசு வேலை வழங்கப்பட்டுள்ளது. குஜராத்தின் பிற பகுதிகளில் இருக்கும் யாருக்கும் அரசு வேலை வழங்கப்படவில்லை. இது சட்டமன்றத்தில் பா.ஜ.க. அரசு கொடுத்த தகவல். ஆனால், அந்த மாநிலத்தில் கடந்த 2 ஆண்டுகளாகப் படித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை 2,49,735. இதுதான் குஜராத் மாடல்..!

## :ப்ளாஷ்பேக்



### அண்ணா சூட்டிய பெயர்!



வேல்முருகன்

பேரறிஞர் அண்ணா காலம் முதலே கழகத்தில் இணைந்து பல போராட்டங்களில் பங்கேற்று கழகப் பணியாற்றி வந்தவர், என் தாத்தா கே.பெரியாண்டி. பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் என் தந்தைக்கு ‘வீரமணி’ என்று பெயர் சூட்டினார். பின்னாளில் ஒருங்கிணைந்த மதுரை மாவட்டத்துக்கு அவைத் தலைவராகப் பொறுப்பு வகித்தவர் என் தாத்தா. அவர் பொறுப்பேற்று இரண்டாண்டுகள் கடந்த நிலையில் 25.08.1976 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்ற போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**-வீ.வேல்முருகன், 52-வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மதுரை மாநகர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 2-வது இந்தி எதிர்ப்புப் போர்!

**1948-ஆம் ஆண்டில் 2-வது இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரைத் தொடங்கினார் தந்தை பெரியார். சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் மறைமலை அடிகள் தலைமையில் கூடிய இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாட்டில், 25 ஆயிரம் பேர் கூடியதால் அப்பகுதியே மக்கள் வெள்ளமானது. ‘‘இந்தி கற்பிக்கப்படும் பள்ளிகள் முன் மறியல் செய்யப்படும்!’’ என அந்த மாநாட்டில்தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் அக்காலகட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 392




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131